# செய்யுள் - நீதி வெண்பா

விடை தருதல் :

1. கல்வியைப் போற்றிக் காக்க வேண்டும் என செய்குதம்பிப் பாவலர் ஏன் குறிப்பிடுகிறார்?

அருளினைப் பெருக்கி அறிவைச் சீராக்கி, மயக்கம் அகற்றி, அறிவுக்குத் தெளிவு தந்து, உயிருக்கு அரிய துணையாய் இன்பம் சேர்ப்பது கல்வியே ஆகும். எனவே அதைப் போற்றிக் காக்க வேண்டும் என செய்குதம்பிப் பாவலர் குறிப்பிடுகிறார்

2. சதாவதானம் குறிப்பு வரைக

சதம் என்றால் நூறு என்று பொருள். ஒருவரது பழைமையையும் நினைவாற்றலையும் நுண்ணறிவையும் சோதிப்பதற்காக ஒரே நேரத்தில் நிகழ்த்தப்படும் நூறு செயல்களையும் நினைவில் கொண்டு விடையளித்தலே சதாவதானம் ஆகும்.

3. செய்குதம்பிப் பாவலர் குறிப்பு வரைக

பெயர் : செய்குதம்பி
பிறப்பு : ஜூலை 31 1874
ஊர் : கன்னியாகுமரி, இடலாக்குடி
சிறப்பு :

- 15 வயதில் செய்யுள் இயற்றும் ஆற்றல்.
- 1907 ஆம் ஆண்டு மார்ச் 10 ஆம் நாள் சென்னை விக்டோரியா அரங்கத்தில் அறிஞர் பலர் முன்னிலையில் நூறு செயல்களை ஒரே நேரத்தில் செய்து காட்டி சதாவதானி என்று பாராட்டப்பெற்றார்.